# குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்
**இணையவழியில் (Online) கடவுச்சீட்டுக்கான ஆவணங்களை சமர்ப்பித்தல் – உள்நாட்டு விண்ணப்பதாரிகள்**

**கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்பதற்கான அறிவுறுத்தல்கள்**
**(தயவுசெய்து அறிவுறுத்தல்களை கவனமாக வாசிக்கவும்)**

## 1. விண்ணப்பிப்பது எவ்வாறு

1.1. தாங்களுக்கு துரித சேவையின் கீழ் அல்லது சாதாரண சேவையின் கீழ் விண்ணப்பிக்க முடியும்.

1.2. தாங்கள் துரித சேவையை தெரிவுசெய்யுமிடத்து தங்களது கைவிரல் அடையாளம் பெறப்பட்ட நாளிலிருந்து மூன்று நாட்களுக்குள் கடவுச்சீட்டு விநியோகிக்கப்படும்.

1.3. தாங்கள் சாதாரண சேவையை தெரிவுசெய்யுமிடத்து தங்களது கைவிரல் அடையாளம் பெறப்பட்ட நாளிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் கடவுச்சீட்டு விநியோகிக்கப்படும்.

## 2. தகுதிகள்

2.1. **இந்தச்சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமை நியதிகள் பின்வருமாறு :**

2.1.1. தாங்கள் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது தங்களது வயது 15 வயதுக்கு மேலாக இருத்தல் வேண்டும்.

2.1.2. தங்களிடம் செல்லுபடியான கடவுச்சீட்டு இருத்தல் வேண்டும்.

2.1.3. தங்களது தேசிய அடையாள அட்டை NIC /கடவுச்சீட்டு/ தங்களது முழுப்பெயர் கரைநிரலில் (***blacklist***) சேர்க்கப்பட்டிருத்தல் கூடாது.

2.1.4. நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயணத் தடை இருத்தல் கூடாது.

2.1.5. இலங்கை முப்படையினரால் அல்லது வேறு அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்களால் தங்களுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயணத்தடை இருத்தல் கூடாது.

2.1.6. இந்த இணையவழி கடவுச்சீட்டு விண்ணப்ப முறையின் கீழ் உத்தியோகபூர்வ மற்றும் இராஜதந்திர கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள முடியாது.

2.2. இல 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி மேலுள்ள நியதிகளை பூர்த்திசெய்யாத போது தங்களுக்கு இணைய வழியில் விண்ணப்பிக்க முடியாது. எனவே, தயவுசெய்து திணைக்களத்தின் பிரதான அலுவலகத்திற்கோ அல்லது பிராந்திய அலுவலகமொன்றுக்கோ வருகைத்தரவும்.

## 3. தேவையான ஆவணங்கள்

3.1. **கடவுச்சீட்டு ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்கு வருடி எடுக்கப்பட்டு (scan) தரவேற்றம் செய்ய செய்ய வேண்டிய ஆவணங்கள் பின்வருமாறு.**

3.1.1. தேசிய அடையாள அட்டை **(NIC)**

3.1.2. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்

3.1.3. 1948 இல 18 குடியுரிமைச் சட்டத்தின் பிரிவு 5(2) இன் கீழான குடியுரிமை (ஏற்புடையதாயின்)

3.1.4. 1948 இல 18 குடியுரிமைச் சட்டத்தின் பிரிவு 11 இன் கீழான குடியுரிமை (ஏற்புடையதாயின்)

3.1.5. இரட்டைக் குடியுரிமைச் சான்றிதழ் (ஏற்புடையதாயின்)

3.1.6. தொழில் வழங்குநரிடமிருந்துபெற்றுக்கொண்ட கடிதம் (ஏற்புடையதாயின்)

3.1.7. திருமணச் சான்றிதழ் (ஏற்புடையதாயின்)

## 4. பொதுவான அறிவுறுத்தல்கள்

4.1. தயவுசெய்து பின்வரும் **URL** க்கு **Log** ஆகவும்.

https://www.immigration.gov.lk/

4.2. விண்ணப்பப்படிவத்தை கட்டாயம் ஆங்கில மொழியில் நிரப்புதல் வேண்டும்..

4.3. துரித சேவையின் கீழ் கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு கூரியர் சேவை மூலமும் சாதாரண சேவையின் கீழான விண்ணப்பதாரிகளுக்கு பதிவுத் தபால் மூலமும் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

4.4. கூரியர் கட்டணம் / பதிவுத் தபால் கட்டணம் திணைக்களத்தினால் செலுத்தப்படும்.

4.5. தாங்கள் தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட புகைப்பட பற்றுச்சீட்டை வைத்திருப்பவராயின் தயவுசெய்து அந்த புகைப்படத்தின் ஏற்றுக்கொள்ளும் இலக்கத்தை உட்படுத்துக.

4.6. தரவேற்றம் செய்யப்படும் (**upload**) அனைத்து ஆவணங்களும் **JPEG** வடிவத்தில் இருத்தல் வேண்டும் அத்தோடு தரவேற்றம் செய்யப்படும் கோப்புக்களின் அளவு **5 MB** க்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

## 5. சேவை நிலையத்திற்குச் செல்வதற்கான அறிவுறுத்தல்கள்

5.1. தாங்கள் ஒரு சேவை நிலையத்தை தெரிவுசெய்ய வேண்டப்படுகின்றீர்

5.1.1. திணைக்களத்தின் தலைமை அலுவலகம்

5.1.2. திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்கள்

5.1.3. பிரதேச செயலகங்களில் நிறுவப்பட்டுள்ள ஆட்பதிவுத் திணைக்ளத்தின் அலகு *(DS – DRP)*

5.2. **தாங்கள் தெரிவுசெய்யும் சேவை நிலையத்தில் பின்வரும் விடயங்களை வழங்குதல் வேண்டும்.**

5.2.1. விண்ணப்பதாரியின் கைவிரல் அடையாளம் (கட்டாயத் தேவைப்பாடு)

5.2.2. விண்ணப்பதாரியின் கையொப்பம் (கட்டாயத் தேவைப்பாடு)

5.2.3. விண்ண்ணப்பதாரியின் வலுவாக்கப்பட்ட உயிர்மானப் புகைப்படம் (விருப்பத்திற்குரியது)

5.3. விண்ணப்ப்படிவத்தை சமர்ப்பிக்கும் போது ' இணைய வழியில் கடவுச்சீட்டுப் பெற்றுக்கொள்வதற்கு நேரத்தை ஒதுக்கிக்கொள்ளும் அறிவித்தலொன்று தங்களது சாதனத்திற்கு அனுப்பப்படும். அதே நேரம் எம்முடன் பதிவுசெய்துள்ள கையடக்க தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தியொன்று (**SMS**) அனுப்பப்பட்டு விண்ணபத்தின் தொடர்பிலக்கம் அறிவிக்கப்படும்.

5.4. கொடுப்பனவை உரிய முறையில் செய்யும் போது தங்களுக்கு குறுஞ்செய்தி (**SMS**) அனுப்பப்படும்.

5.5. தங்களது விண்ணப்பம் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்வுடன் தங்களுக்கு உடனடியாக குறுஞ்செய்தி (**SMS**) அனுப்பப்படும். தங்களுக்கு குறுஞ்செய்தி (**SMS**) கிடைக்கும் வரையில் சேவை நிலையத்திற்குச் செல்ல வேண்டாமென கண்டிப்பாக அறிவுறுத்தப்படுகின்றீர்.

5.6. பிரதேச செயலகங்க*ளில் நிறுவப்பட்டுள்ள ஆட்பதிவுத்* திணைக்களத்தின் அலகு*களுக்கு* (DS – DRP) வருகைத்தரும் போது பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிக்கத் தயாராக இருத்தல் வேண்டும்.

5.6.1. இணைய வழியில் (***Online***) நேரம் ஒதுக்கப்பட்ட அறிவித்தல் (கட்டாயமானது)

5.6.2. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (கட்டாயமானது)

5.6.3. தேசிய அடையாள அட்டை (கட்டாயமானது)

5.6.4. தற்போதைய கடவுச்சீட்டு (ஏற்புடையதாயின்)

## 6. விண்ணப்பிப்பதற்கான நிபந்தனைகள்

6.1. இலங்கை கடவுச்சீட்டு ஒன்றுக்கு விண்ணப்பிப்பதற்கு தாங்கள் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டுமென்பதோடு தற்போது நாட்டில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

6.2. கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும் செயன்முறைக்கு பதிவுசெய்துகொள்வதற்கு தாங்களுக்கு செல்லுபடியான கைடயக்க தொலைபேசி இலக்கம் ஒன்று இருத்தல் வேண்டும். அவ்வாறே கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்பதற்கு தங்களுக்கு செல்லுபடியான மின்னஞ்சல் முகவரியொன்றும் இருத்தல் வேண்டும்.

6.3. தாங்கள் முதற் முறையாக கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்பவராயின் பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிளை சமர்ப்பித்தல் வேண்டும்.

6.3.1. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்

6.3.2. தேசிய அடையாள அட்டை

**6.4** தங்களுக்கு ஏற்கனவே செல்லுபடியான இலங்கை கடவுச்சீட்டு ஒன்று இருப்பின் தங்களது கைவிரல் அடையாளத்தை வழங்குவதற்கு திணைக்களத்தின் தலைமை அலுவலகம், திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் நிறுவப்பட்டுள்ள ஆட்பதிவுத் திணைக்களத்தின் அலகுகளுக்கு ***(DS – DRP)*** வருகைத்தரும் போது தங்களிடம் உள்ள கடவுச்சீட்டை எடுத்துவரல் வேண்டும்.

**6.5** தங்களது செல்லுபடியான கடவுச்சீட்டு தற்போது காணாமல் போயிருப்பின் தங்களுக்கு புதிய கடவுச்சீட்டு ஒன்றினைப் பெற்றுக்கொள்ள தாங்கள் கட்டாயம் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்கு / பிராந்திய அலுவலகமொன்றுக்கு வருகைத்தரல் வேண்டும்.

**6.6** தாங்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர் எனின், தாங்கள் தற்போது புகைப்பட ஏற்பு பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொண்டிருப்பின் திணைக்களத்தின் தலைமை அலுவலகம், திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் நிறுவப்பட்டுள்ள ஆட்பதிவுத் திணைக்களத்தின் அலகொன்றுக்குச் செல்லாமல் கையொப்ப படிவத்தை தரவிறக்கம் செய்து நேரடியாக மாதிரிக் கையொப்பத்தை தரவேற்றம் செய்ய முடியும்.

**6.7** தாங்கள் 15 - 60 வயதுக்கு இடைப்பட்டவர் எனின், தங்களது புகைப்படத்தை எடுப்பதற்கும் கைவிரல் அடையாளத்தை வழங்குவதற்கும் கையொப்பத்தை இடுவதற்கும் பிரதான அலுவலகத்திற்கு, தெரிவுசெய்த திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் நிறுவப்பட்டுள்ள ஆட்பதிவுத் திணைக்களத்தின் அலகொன்றுக்கு (**DS-DRP**) தாங்கள் கட்டாயம் வருகைத்தரல் வேண்டும்.

## 7. கட்டணங்கள்

7.1. துரித சேவைக்கு ரூ. 15,000.00 மற்றும் சாதாரண சேவைக்கு ரூ. 5,000.00 கட்டணம் அறவிடப்படும்.

7.2. தாங்கள் கடவுச்சீட்டுக்கான புகைப்படத்தை பிரதேச செயலகங்களில் நிறுவப்பட்டுள்ள ஆட்பதிவுத் திணைக்களத்தின் அலகொன்றில் (**DS-DRP)** பெற்றுக்கொள்வதாயின் அதற்கான கட்டணம் ரூ. 350.00 ஆகும்.

7.3. தங்களுக்கு இணைய வழியில் கட்டணத்தைச் செலுத்துவதற்கு செல்லுபடியான கடன் / பற்று அட்டைகள் (**credit/debit card** ) இருத்தல் வேண்டும். அல்லது தங்களுக்கு "வங்கியில் செலுத்தவும்" எனும் **'Pay at bank'** என்பதை தெரிவுசெய்ய முடியும்.

7.4. தாங்கள்"வங்கியில் செலுத்தவும்" **'Pay at Bank'** என்பதை தெரிவு செய்யுமிடத்து பற்றுச்சீட்டை தரவிறக்கம் செய்து அச்சுப் பிரதியைப் பெற்றுக்கொண்டு அண்மையிலுள்ள இலங்கை வழங்கிக் கிளையொன்றுக்குச் சென்று **(BOC)** தங்களது கட்டணத்தைச் செலுத்த முடியும்.